குமரி அறிவியல் பேரவை

இளம் விஞ்ஞானிகள்

## பெற்றோர்கள் கருத்தறியும் கூட்டம்

## 23-03-2009



குமரி அறிவியல் பேரவை இளம் விஞ்ஞானிகளுக்கு ஒரு வருட காலம் பல்வேறு ஆய்வுப்பயிற்சிகள் வழங்கி வருகிறது. அதன் நிறைவு நிகழ்ச்சியும் விருது வழங்கும் விழாவும் ஏப்ரல் மாதம் நடைபெற இருக்கிறது அதற்கு முன்னோடியாக இளம் விஞ்ஞானிகள் பெற்றோர்கள் வழிகாட்டி ஆசிரியர்கள் கருத்தறியும் கூட்டம் தக்கலை அமலா கான்வென்ட் மெட்ரிக் பள்ளியில் வைத்து நடைபெற்றது. குமரி அறிவியல் பேரவை அமைப்பாளர் முள்ளஞ்சேரி மு.வேலையன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்



இந்திய மருத்துவ சங்கத்தின் தேசியத் துணைத் தலைவர் டாக்டர் விஜயகுமார் விஞ்ஞானிகள் பென்சிகர்ராஜன், முருகன் தேசியபசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ஜோபிரகாஷ் தலைமையாசிரியர் ஜாண்சன் ஆகியோர் சிறப்புரையாற்றனார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் அறிவுத்திறன் வளர்ச்சி குறித்து பேசினர் தன்னம்பிக்கை, பத்திரிகை படிக்கும் ஆர்வம் , முக்கியமான செய்திகளை சேகரித்து ஆவணப்படுத்துதல் , பேசும்திறன் ,கட்டுரை எழுதுதல் ,கவிதை எழுதும் ஆற்றல் ,எதையும் தைரியமாக எடுத்துரைக்கும் திறன் , மற்றவர்களோடு விவாதிக்கும் ஆற்றல் , ஆய்வுக்கண்ணோட்டத்துடன் தகவல் திரட்டுதல் , ஒருங்கிணைக்கும் திறன் முதலியவைகள் வளர்ந்திருப்பதாக தெரிவித்தனர்.





வழிகாட்டி ஆசிரியர்கள் ஜேன்காதரின், ஜாஸ்மின் , லத்திஸ்மேரி, உமா ,சரோஜா கமலபிரியதர்ஷினி, ஜெனிலாஜாஸ்மின் , ஹெலன்பிரசிஸ்,பிருந்தா் ஆகியோா் கருத்து தெரிவித்தனா் கன்வினா்கள் சதீஸ்குமாா் , மொ்லின்மேரி, ஜெயகுமாாி ஆகியோா் பேசினா். மதுரை காமராஜா் பல்கலைக்கழகத்தில் எரிசக்தி துறையில் இளம் விஞ்ஞானிகள் பருவநிலை மாற்றம் அதன் விளைவுகள் குறித்து ஆய்வு செய்தவைகளை பேராசிரியா்கள் மத்தியில் விளக்கமளிக்க முடிவு செய்யப்பட்டன.

இவன்



முள்ளஞ்சேரி.மு.வேலையன் ,
அமைப்பாளா்,
குமரி அறிவியல் பேரவை,
முளங்குழிஅஞ்சல், குமரிமாவட்டம்.
9942758333.

